# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2016

## 2016/01

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபம்

**காலம்** :- 23.02.2016 (செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணி

### சமுகமளித்த கல்வி ஆலோசனைக் குழுவினர் :-

- கௌரவ திரு.த.குருகுலராசா – வடக்கு மாகாண கல்வி அமைச்சர். (தலைவர்)
- கௌரவ திரு.அன்ரனி ஜெயநாதன்- வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர்.
- கௌரவ திரு.பா.கஜதீபன் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்

### சமுகமளித்த வடக்கு மாகாண சபை கௌரவ உறுப்பினர்கள்

- கௌரவ திரு.க.தருமலிங்கம் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.க.வ.கமலேஸ்வரன்- வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ம.தியாகராசா – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.அ.பரஞ்சோதி – வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.கா.கனகரத்தினம் - வடக்கு மாகாகண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.க.சிவநேசன் - வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.வே.சிவயோகன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ச.சுகிர்தன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ப.அரியரத்தினம் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ஆ.சி.து.ரவிகரன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திருமதி.அனந்தி சசிதரன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.

### சமுகமளித்த ஏனையோர்

- திரு.எஸ்.உதயகுமார் , மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்
- எந்திரி.தே.சுரேஸ்குமார், பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- எந்திரி.சி.விகிர்தன் , பொறியியலாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் - கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் - பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.கே.முகுந்தன் - விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.தி.ஞானசுந்தரன் - பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), மா.க.அமைச்சு
- திரு.மு.குருபரன் - பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திருமதி.S.வனஜா – உதவிப் பணிப்பாளர், கலாசாரத் திணைக்களம், வடமாகாணம்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று கூட்டத்தை ஆரம்பித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கௌரவ வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் கௌரவ திரு.ம.அன்ரனி ஜெயநாதன் அவர்கள் நடைபெற்றுவரும் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆலோசனை குழு அங்கத்தவர்களான எட்டு உறுப்பினர்கள் மட்டுமே கருத்துக்களை

தெரிவிப்பதற்கு அனுமதி உள்ளது எனவும் ஏனைய கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியுமே மட்டுமன்றி கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனுமதி இல்லை எனவும் ஆலோசனைக் குழுவில் அங்கத்துவம் வகிக்காத கௌரவ உறுப்பினர்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதனால் முக்கிய முடிவுகளை எட்டுவதில் காலதாமதமும் சிரமமும் ஏற்படுவதாகவும் இவ் விடயம் தொடர்பில் உறுதியான முடிவை எட்டுவது சிறந்தது எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திருமதி அனந்தி சசிதரன் அவர்கள் கல்வி சம்பந்தமாக பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளதனால் கல்வி ஆலாசனைக் குழுக் கூட்டத்தில் தங்களிற்கான அனுமதி மறுக்கப்பட்டால் கௌரவ உறுப்பினர்களிற்காக பிறிதொரு கூட்டம் கூட்டப்படல் வேண்டும் எனவும் இவ் விடயங்களை நேரடியாக சபைக் கூட்டத்தில் கதைப்பது அழகல்ல எனவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.அ.பரஞ்சோதி அவர்கள் முடிவுகளை எட்டுவது ஆலோசனைக் குழு அங்கத்தவர்களை சார்ந்திருப்பினும் கருத்துகளை வெளியிட கௌரவ உறுப்பினர்களிற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் கல்வி ஆலோசனைக்குழுக் கூட்டத்தினை முன்னதாகவே நடாத்தி அங்கத்தவர்களிற்கிடையிலான கலந்துரையாடல்கள் முடிவடைந்த பின் ஏனைய உறுப்பினர்களையும் உள்ளடக்கிய கூட்டத்தினை நடாத்த முடியும் எனவும் கொள்கை ரீதியான விடங்களை மாகாண சபைக் கூட்டத்தில் முன் வைப்பதும் நடைமுறை ரீதியிலான விடயங்களை குழுக் கூட்டத்தில் முன்வைப்பதுமே சிறந்தது எனத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ கா.கனகரத்தினம் அவர்கள் ஆலோசனைக்குழு அங்கத்தவர்களது கருத்துக்களிற்கு முன்னுரிமையளிப்பது அவசியமானது எனத் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு ச.சுகிர்தன் அவர்கள் ஆரம்பத்தில் குழு உறுப்பினர்களினூடாக பிரேரணைகளை முன் வைக்குமாறு தெரிவித்தார். ஆனால் ஏனைய உறுப்பினர்களிற்கும் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டதன் மூலம் நாம் நேரடியாக எமது கருத்துக்களை முன்வைப்பது இலகுவானதாகவும் விரைவில் முடிவுகளை எட்டுவது சுலபமாகவும் காணப்பட்டதாக தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌலவ திரு எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் மகாண சபை உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள கருத்துத் தெரிவிக்கும் அனுமதி போல் ஆலோசனை குழு கூட்டத்தில் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆலோசனை கூட்ட அறிக்கைகள் அடுத்த கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கௌரவ உறுப்பினர்களிற்கு வழங்கப்படுவதாகவும் இனிவரும் காலங்களில் முன்கூட்டியே கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கௌரவ அமைச்சர் அவர்கள் கௌரவ அவைத் தலைவரினால் தமக்கு வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தினை சபைக்கு சமர்ப்பித்து அதில் தெரிவிக்கப்பட்டள்ளவாறு குழு அங்கத்தவர்களிற்கு மட்டுமே தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் கௌரவ உறுப்பினர்கள் நேர விரயத்தினை கருத்திற் கொண்டு சுருக்கமாகவும் பொருத்தமான விடயங்களை முன்வைக்கலாம் எனவும் பிரேரணைகள் சமர்பிக்க முடியும் எனவும் கூட்டத்திற்கு சமுகமளிக்க முடியாத கௌரவ உறுப்பினர்கள் எழுத்து மூலம் தமது கோரிக்கைகளை முன்வைத்தால் அவை நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

## 23.12.2015 ஆந் திகதிய அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்

- **பாடசாலை தரமுயர்த்தல்**

  பாடசாலை தரமுயர்த்தல் தொடர்பில் ஏதாவது கோரிக்கைகள் இருப்பின் எழுத்து மூலம் கோரிக்கைகளை முன்வைத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு உரிய முடிவுகளை எட்டமுடியும் என கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1. மன்/முன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலை தரம் 10 ஆம் 11 ஆம் வகுப்புகள் ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
2. வ/செக்கட்டிப்புலவு அ.த.க. பாடசாலை தரம் 10 ஆம் 11 ஆம் வகுப்புகள் ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
3. வ/சமளங்குளம் அ.த.க. பாடசாலையில் தரம் 06 ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

- **மீள ஆரம்பித்தல்**

1. யா/காரைநகர் இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலை – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

- **வேறு விடயங்கள்**

1. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையினை நடாத்துதல் தொடர்பான தீர்மானத்தினை மத்திய அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும். இதனை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் மாணவர்களை 70 புள்ளிகளிற்கு மேல் பெறுவதற்கு அனைவரும் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ளல் - மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வலயக் கல்விப் அலுவலகங்களுடாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. விபரங்கள் இணையத்தளத்தினூடாக வெளியிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. பபடசாலைகளிற்கு மாணவர்கள் சுமையோடு செல்லுதல் தொடர்பில் உரிய சுற்றுநிருபம் உரியவர்களை சென்றடைய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
3. இந்தியாவிலிருந்து மீள நாட்டிற்கு திரும்பியுள்ள பல இளைஞர் , யுவதிகளிடம் ஆங்கிலம் தொடர்பில் அறிவுள்ளவர்கள், பட்டதாரிகள் பலர் காணப்படுவதனால் அவர்களை ஆசிரியர்களாக நியமித்தல் - உரிய படிமுறையூடாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. செவிப்புலனற்றோர் பாடசாலையில் (நவீல்ட்) இரு வகையான சைகை முறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் சைகை மொழி மூலமான உரையாடலில் பிரச்சினைகள் ஏற்படுவது தொடர்பில் தற்போது சர்வதேச ரீதியிலான முறையில் கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பழைமையான இலங்கைக்குரிய சைகை முறை கற்பித்தல்களும் தொடர்ந்து சில காலங்கள் கற்பித்தல் தொடர்பில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. முன்பள்ளி ஆசிரியர்களிற்கான கொடுப்பனவு உரிய தினங்களில் கிடைப்பதில்லை எனவும் கொடுப்பனவினை பெற்று வந்த சில ஆசிரியர்களிற்கு தற்போது கொடுப்பனவு கிடைப்பதில்லை என்பது தொடர்பில் இந்நிலை சீர் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
6. தரம் 111 பாடசாலைகள் பலவற்றில் பெண் ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதனால் பாடசாலை நடவடிக்கைகளில் பல கஷ்டங்களை அதிபர்கள் எதிர்நோக்குவதால் ஆண் ஆசிரியர்களை நியமித்தல் தொடர்பில் ஆரம்பப் கல்வியில் ஆண் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டது.

## ➢ புதிய பாடசாலை ஆரம்பித்தல்

1. மன்னார் கணேசபுரம் இந்திய வீட்டுத் திட்டம் பகுதியில் ஆரம்பப்பிரிவு ஆரம்பித்தல் - அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ➢ தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.

இவ் விடயம் தொடர்பில் கௌரவ பிரதமர் , கௌரவ இராஜாங்க அமைச்சர் , கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலதரப்பட்டவர்களுடன் கலந்துரையாடப்பட்டதாகவும் இவர்கள் இவ் விடயம் தொடர்பில் கூடியளவில் விரைவாக நியமனங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்களிடம் தொண்டராசியர் வயதெல்லை தொடர்பில் கூடியளவு அக்கறை எடுத்து உரியவர்களை சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.
கௌரவ வட மாகாண சபை உறுப்பினர் திரு பா.கஜதீபன் அவர்கள் தொண்டராசிரியர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக வெளியான தகவல் பற்றிய விபரங்களை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார்.
கௌரவ அமைச்சர் அவர்கள் இதுவரையில் அப்படியான பட்டியல் எதுவும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ வட மாகாண சபை உறுப்பினா் கா.கனகரத்தினம் அவா்கள் தீவக வலயத்தில் 12 ஆசிரியா் உள்ளடங்கலாக பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பல ஆசிரியா்கள் தகைமையிருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் கௌரவ நாடளுமன்ற உறுப்பினா் அங்கஜன் இராமநாதன் அவா்களால் அண்மையில் தொண்டராசிரியா்களிற்கான கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் இதில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழுங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன் தீவக வலயத்தில் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருக்காத தெண்டராசிரியா்கள் தமக்கு உரிய நியமனம் வழங்கப்படாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

தொடா்ந்து கருத்துத் தெரிவித்த கௌரவ மாகாண சபை உறுப்பினா் கலாநிதி க.சா்வேஸ்வரன் அவா்கள் ஏற்கனவே தொண்டராசிரியா் நியமனம் தொடா்பில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து வினவியதுடன் வட மாகாணத்திற்கான ஆசிரியா் ஆட்சோ்ப்பில் மத்திய அரசு விண்ணப்பங்களை கோரி பரீட்சைகளை வைத்து நியமனம் வழங்குவது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் மத்திய அரசாங்கத்தினால் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரதியொன்றை பெற ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டா்.

தொடா்ந்து கருத்து தெரிவித்த கௌரவ அமைச்சா் அவா்கள் தொண்டராசிரியா் தொடா்பில் எவ்விதமான இறுதிப்பட்டியலும் தயாரிக்கப்படவில்லை எனவும் கல்வி அமைச்சினால் பகுப்பாய்விற்காகவும் தகவல்களை திரட்டுவதற்கு தொடா் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தாம் பலதரப்பட்டவா்களுடன் தொண்டராசிரியா் நியமனம் தொடா்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் கபினட் பத்திரம் சமா்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றே முடிவுகளை எட்டமுடியும் எனவும் நீண்ட காலம் தொண்டராசிரியராக கடமையாற்றிய பலா் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறுகிய காலம் கடமையாற்றிய பலரின் பெயா்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தகுதியானவா்களிற்கு நியமனம் வழங்குவது முக்கியமானது எனவும் கபினட் பத்திரம் சமா்ப்பிக்கப்படும் போது பல்வேறுபட்ட யோசனைகளை முன்வைப்பது நமது கடமையென கௌரவ மாகாண சபை உறுப்பினா் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

- **மு/வித்தியானந்த கல்லூரியின் எதிர்கால நிலைமை**

மு/வித்தியானந்த கல்லூரிக்கு அண்மையிலுள்ள பாடசாலை தரமுயா்த்தப்பட்டுள்ளது எனவும் இப் பாடசாலை உரிய வசதிகள் கொண்ட பாடசாலையாக இல்லை எனவும் உரிய முறையில் அனுமதி பெறப்படாது அனுமதி வழங்கப்பட்டதாகவும் பெரும்பான்மையானவா்களிற்கு இதில் உடன்பாடு இல்லை எனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினா் கௌரவ திரு க.சிவநேசன் அவா்கள் தெரிவித்தார்.

தொடா்ந்து கருத்து தெரிவித்த கௌரவ அமைச்சா் அவா்கள் உரிய நடைமுறைகள் பின்பற்றியே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பாடசாலை தரமுயர்த்தலின் போது உரிய கொள்கைகள் கடைப்பிடிக்கப்படல் அவசியமானது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தரம் 09 வரையுள்ள பாடசாலைகளை தரம் 11 வரை உயர்த்தும் போது மாணவர்கள் சாதாரண தர பரீட்சையை கருத்திற் கொண்டு கல்வி பயிலும் போது கல்வித்திறன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் மாகாண கல்வி திணைக்களத்தை சார்ந்த உத்தியோகத்தர்கள் தண்ணீரூற்று பாடசாலை சார்ந்த சமூகத்துடன் கலந்துரையாடிய பின்பே தரமுயர்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தரம் 08,09 வரையுள்ள பாடசாலைகளினை தரம் 05 வரை மட்டுப்படுத்தவோ அல்லது தரம் 11 வரை தரமுயர்த்தவோ நடவடிக்கை மேற்கொள்வது சிறப்பாக அமையும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

பாடசாலைகளை தரம் குறைக்கும் போது பெற்றோர் குழப்பமடைய வாய்ப்புகள் உள்ளதாகவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.ச.சுகிர்தன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கருத்துரைத்த கௌரவ அமைச்சர் அவர்கள் வழங்கப்பட்டுள்ள அனுமதியை இடைநிறுத்தாது தொடர்ந்து செயற்படலாம் எனவும் தெரிவித்தார்.

- **மன்/தேவன்பிட்டி றோ.க.த.க பாடசாலை கல்விச் செயற்பாடுகள் பின்னடைவு தொடர்பாக**

கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- **பாடசாலை தரமுயர்த்தல்**

1. மன்/புத்/அயூப் அ.மு.க.பாடசாலை – புத்தளத்தில் இயங்குவதால் பின்னர் ஆராயப்படலாம்.
2. கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.அ.அஸ்மின் அவர்களின் கோரிக்கையான மன்/தலைமன்னார் அ.மு.க பாடசாலை பாடசாலையில் தரம் 06 ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
3. கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.அ.அஸ்மின் அவர்களின் கோரிக்கையான மன்/முசலி அகத்தி முறிப்பு அ.மு.க. பாடசாலையில் தரம் 06 தொடக்கம் தரம் 09 வரை ஆரம்பித்தல் - அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## ➢ புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது

மன்னார் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்கள் 03 வருடங்கள் பிற்போடுவதற்கு கலந்துரையாடியதாக அறியக்கூடியதாயிருந்தது. ஆனால் அண்மையில் கண்டியில் இடம்பெற்ற முதலமைச்சர்களிற்கிடையிலான கலந்துரையாடலில் கோரிக்கை விடுத்ததாகவும் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆவன செய்வதாக தெரிவிக்கப்பட்டதாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

## ➢ விளையாட்டு தொடர்பானது

1. மாகாண ரீதியில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் , பயிற்றுவிப்பாளர்களிற்கு இடமாற்றங்கள் , பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு உத்தியோகத்தர்களிற்கு விண்ணப்பித்தவர்களில் ஒருவர் மீது வழக்கு ஒன்று நீதிமன்றில் இடம்பெறுவதால் அவருடைய நியமனம் நிறுத்தப்பட்டது.
2. துரையப்பா ஸ்ரேடியம் மத்திய அமைச்சினால் திருத்தம் செய்யப்படுகின்றது.
3. 19 வயது கால்பந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டிய அணி இந்தியாவில் போட்டியில் கலந்து கொள்ள நிதி ஒதுக்கப்பட்டு 19 ஆம் திகதி வெளிநாடு சென்றுள்ளனர்.
4. வல்வெட்டித்துறையில் சர்வதேச ரீதியில் நீச்சல் தடாகம் அமைப்பது தொடர்பில் - வாரியம் சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## ➢ கலாசாரம் தொடர்பாக

1. நல்லூர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட கலாசார விழாவிற்கு கௌரவ மாகாண சபை உறுப்பினர்களிற்கு அழைப்பு விடுக்கப்படாமை தொடர்பில் 2016 ஆம் ஆண்டு விழாவிற்கான அழைப்பு தொடர்பில் செயலாளரால் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
2. கிழக்கு மாகாணத்தில் கலாசார பிரிவு கலாசார திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கலாசார பிரிவையும் திணைக்களமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பில் - தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3. பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் முரண்படக்கூடிய நிலைகள் ஏற்படுகின்றன. தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் எமது கலாசார முறையில் இன்னிய வரவேற்புகளை மேற்கெள்ளுதல் சிறப்பானதாக அமையும்.
5. வலிகாமம் வலயக் கல்வி வலய பாடசாலை நிகழ்விற்கு அரசியல்வாதிகளை விருந்தினர்களாக அழைக்க வலயக் கல்விப் பணிப்பாளர் கட்டுப்பாடுகளை விதிப்பதாக தெரிவிக்கப்பட்டது. இவ் விடயம் தொடர்பில் கௌரவ கல்வி அமைச்சரை தொடர்பு கொள்ள கோருதல்.
6. கலாச்சார உத்தியோகத்தர்கள் இடமாற்றம் இரத்து செய்யப்பட்டது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இடமாற்ற குழு அமைக்கப்பட்டு இடமாற்றப்பட்டியல்

தயாரிக்கப்பட்டதாகவும் செயலாளர் ஒரு சில மாற்றங்களை மேற்கொண்டு பட்டியல் வெளியிடப்பட்டதாகவும் பின்னர் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டு மீள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் ஏப்பிரல் மாதம் 01 ஆம் திகதி கடமையேற்கும் வகையில் புதிய இடமாற்றப் பட்டியல் தயார் செய்யப்படும் என கலாசாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## ➢ வேறு விடயங்கள்

1. அண்மையிலுள்ள பாடசாலையில் சிறந்த பாடசாலை தொடர்பான முன்மொழிவுகள் தொடர்பில் தற்போதைய நிலை பற்றி அறியத்தருமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
   தொடர்ந்து கருத்துரைத்த கௌரவ அமைச்சர் அவர்கள் தேசிய ரீதியில் 63 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவித்தார். இவ்விபரம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
2. துணுக்காய் வலயத்தில் நாட்டில் முதன் முறையாக மக்கள், மாணவர்களர், அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு உருவாக்கப்பட்டு 29.02.2016 தொடக்கம் செயற்படவுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த (Pilot) நடவடிக்கையாகும்.
3. பதிலாசிரியர் முறையும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மகப்பேற்று விடுமுறையில் ஆசிரியர்கள் செல்லும் போது கணித விஞ்ஞான பாடங்களை கற்பிக்கக் கூடிய 65 வயதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் குறித்த காலத்தில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக 30 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
   பாலியல் குற்றத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களிற்கு கடுமையாக தண்டனை வழங்கப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு. எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
4. பாலியல் தொடர்பாக மாணவர்களிற்கு விழிப்பூட்டல் நடவடிக்கைகள் கட்டாயமானதாக காணப்படுவதாகவும் அதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.
   மாணவர் மட்டத்தில் இவ்விடயம் நிச்சயம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குற்றம் புரிந்த ஆசிரியர்களிற்கு கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
5. கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.அ.அஸ்மின் அவர்களின் கோரிக்கை தொடர்பில் - யா/கஜீதா முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் குடும்பங்களை வெளியேற்றுதல் - பிரதேச செயலரை தொடர்பு கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.
6. கௌரவ வடக்கு சபை உறுப்பினர் கௌரவ திரு.அ.அஸ்மின் அவர்களின் கோரிக்கையான அண்மையிலுள்ள பாடசாலைகள் திட்டத்தில் யா/ஒஸ்மானியா கல்லூரி நீக்கப்பட்டமை – எழுத்து மூலம் உரிய பிரிவினை தொடர்பு கொள்ளுதல்
7. வடமராட்சி யா/தேவரையாளி இந்துக் கல்லூரி அண்மையிலுள்ள பாடசாலைகள் திட்டத்தில் நீக்கப்பட்டமை - எழுத்து மூலம் உரிய பிரிவினை தொடர்பு கொள்ளுதல்

8. மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.அ.அஸ்மின் அவர்களின் கோரிக்கையான நாச்சிக்குடாவில் முஸ்லிம் ஆசிரியர்கள் பற்றாக்குறை நீக்கப்படல் வேண்டும்.
9. அச்சுவேலி காணியினை கையளித்தல் - உரியவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
10. விளையாட்டு உத்தியோகத்தர் செ.சதீஸ்குமார் அவர்களின் சம்பள நிலுவை வழங்குவது தொடர்பில் - உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
11. பாடசாலைகளுடைய பௌதிக வள தேவைகள் தொடர்பில் கோட்டங்களிற்கூடாக வலயங்களிற்கு சமர்ப்பித்து ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் அமைச்சிற்கு சமர்ப்பித்தால் ஒதுக்கீடுகளை மேற்கொள்வது இலகுவானதாக இருக்கும்.
12. 400m மைதானங்கள் பாடசாலைகளிற்கு அமைப்பதற்கு பாடசாலைகள் ரீதியாக கோரிக்கை விடப்படின் ஆராயப்படலாம்.
13. கிளிநொச்சி , வலிகாமம் வலயங்களை இரண்டாக பிரிப்பது தொடாபில் - சாத்தியப்பாடான அறிக்கையினை மாகாண கல்விப் பணிப்பாளரிடம் கேருதல்.
14. வடமராட்சி கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் - உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் பிற்பகல் 01.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்.

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்